# வசந்த இதழ்
# Vasanta Ethal

KRISHNAMURTI FOUNDATION INDIA OCTOBER 2017 - JANUARY 2018 Rs.2/- VOL XII ISSUE 3



துக்கம் தனிப்பட்டவருடையது அல்ல................5 பற்றுதலின் இயல்பு....................................5 புதிய தலைமுறையினரை..............................7


### புதிய வெளியீடு

## நூற்றாண்டின் சிறந்த நூறு ஆன்மீக நூல்களில் ஒன்று

பிரசித்திப் பெற்ற ஆங்கில சஞ்சிகை ஒன்று, 'இந்த நூற்றாண்டில் வெளியிடப்பட்ட சிறந்த நூறு ஆன்மீக நூல்களில், இது ஒன்று,' என்று 'எண்ணிப்பார்க்க வேண்டிய ஏராளமான விஷயங்கள்' என்ற இத் தமிழாக்கத்தின் மூல நூலான Think on These Things-ஐ சிறப்பித்திருக்கிறது. இளைஞரோ வயதானவரோ யாராயிருப்பினும் அனைத்துத் தரப்பினருக்கும், ஜே.கிருஷ்ணமூர்த்தியின் போதனைகளை அருமையாக அறிமுகப்படுத்தும் நூலாக இது இருக்கிறது.

இந்தியாவில் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுடன் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நிகழ்த்திய கலந்துரையாடல்களின் தொகுப்பாக இந்நூல் உள்ளது. உலகின் பிரபலமான பல்வேறு மொழிகளில் இந்நூல் மொழிப்பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. கல்வியின் பணி என்பது, வாழ்வின் குறிக்கோள் என்பதிலிருந்து கொஞ்சமும் வேறுபடாதது என்று திட்டவட்டமாக இந்நூலில் கிருஷ்ணமூர்த்தி எடுத்துரைக்கிறார்.

'சத்தியம் அல்லது கடவுள் மற்றும் நற்பண்பு ஆகியவற்றை தேடிச் செல்வதற்காக, தன்னிடமிருக்கும் சக்தியாற்றலை மாணவன் வெளிப்படுத்த, அவனுக்கு உதவுவதே, கல்வியின் தலையாய பணி. அத்தகைய பணியை செய்யும் கல்வியானது, ஒருவரை உண்மையிலேயே மனிதனாக வாழச் செய்கிறது. அதன் காரணமாய், அவர் சிறந்த குடிமகனாகவும் இருக்கிறார்... நதி, தன் ஓட்டத்தைத் தாங்கிப் பிடிக்க, கரையை உருவாக்கிக் கொள்கிறது. நதி, கடலை சென்றடைவது போல, அந்தச் சக்தியாற்றலும், சுயமாக அதன் விடுதலையைப் பெறுகிறது.'

'நமது வாழ்க்கையின் அஸ்திவாரமாகவே இருக்கும் 'கடவுள் என்றால் என்ன?' என்ற கேள்விக்கான விடையை கண்டறிவது நமக்குள்ள ஒரு பிரச்சினை, வலுவான அஸ்திவாரம் இல்லையென்றால், கட்டிடம் நீடித்து நிற்காது. கடவுள் அல்லது சத்தியம் என்ற தேடலில் ஈடுபடாமல், அதைப் பற்றிய நேர்மையற்ற, கபடமான கண்டு




பிடிப்புகளை ஏற்றுக்கொள்வதில் அர்த்தம் ஏதுமில்லை.' இது போன்ற ஏராளமான விஷயங்களை இந்நூலின் மூலம் நம்மை எண்ணிபார்க்க செய்கிறார் ஜே. கிருஷ்ணமூர்த்தி. நர்மதா பதிப்பகம் வெளியிட்டிருக்கும் 480 பக்கங்கள் கொண்ட இப் புத்தகத்தின் விலை ரூபாய் 300/- மட்டுமே. இப்புத்தகத்திலுள்ள ஓர் அத்தியாயம் இந்த வசந்த இதழில் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

## உண்மையான சுதந்திரம்

சுதந்திரம் என்ற விஷயத்தைப் பற்றி உங்களுடன் கலந்துரையாட விரும்புகிறேன். இவ்விஷயம் சிறிதே சிக்கலானது. நுட்பமாக ஆராய்ந்து, புரிந்துகொள்ள வேண்டிய தேவை உள்ளது. சுதந்திரம் பற்றி அதிகமாகவே பேசப்படுகிறது. ஒருவர் தான் விரும்பியதை செய்வதற்கான சுதந்திரம், விரும்பிய சமயத்தை பின்பற்றுவதற்கான சுதந்திரம் என பலதரப்பட்ட சுதந்திரம் இருக்கிறது. அறிஞர்களால் சுதந்திரத்தைப் பற்றி எழுதப்பட்ட கணக்கிலடங்கா நூல்களும் உள்ளன. ஆனால், நாம் இவ்விஷயத்தை எளிமையாகவும்,

நேரடியாகவும் அனுகலாமென்று நினைக்கிறேன். இவ்வாறு அணுகுவதால், உண்மையில் சுதந்திரம் என்றால் என்ன என்பதைப் பற்றிய புரிதலை நாம் பெறக்கூடும்.

மேற்கில் கதிரவன் மறையத் தொடங்குகிறான் – வானம் முழுக்க ஒரே ஒளிவெள்ளம் – இளைய நிலா, மரங்களுக்கு மேலே சற்று உயரத்தில் நாணத்துடன் நிற்கிறது – இக் காட்சியைக் காண என்றாவது நீங்கள் உங்கள் ஓட்டத்தை நிறுத்தி, நின்று நிதானித்து அதைப் பார்த்திருக்கிறீர்களா என்று நான் வியக்கிறேன். பல சமயங்களில், கதிரவன் மறையும் நேரங்களில், நதி மிகவும் அமைதியாக இருக்கும். அதன் மேற்பரப்பில் எல்லாவற்றின் பிம்பங்களும் நிழலாடும். அருகிலிருக்கும் பாலம் – அதன் மேல் ஓடிக்கொண்டிருக்கும் புகைவண்டி – குளிர் நிலா – பிறகு, மெதுவாகவே இருட்டத் தொடங்கியதும் பளிச்சிடும் நட்சத்திரங்கள் – எல்லாம் எத்தனை அழகு!

அழகான ஒன்றினை ரசிக்க, கவனம் முழுவதையும் செலுத்தி அதைப் பார்க்க, உங்கள் மனம், அலைபாயும் எண்ணங்களிலிருந்து விடுபட்டு நிசிந்தையாக இருக்க வேண்டியது அவசியமல்லவா? பிரச்சினைகளாலும், கவலைகளாலும், ஊகங்களாலும் நிரப்பப்பட்டதாய் மனம் இருத்தல் கூடாது. உங்கள் மனம் மிகவும் அமைதியாக இருக்கும் போதுதான், உங்களால் உண்மையில் எதையும் கண்டுணர முடியும். எண்ணங்களற்று அமைதியான நிலையிலிருக்கும் மனமானது, மிகுந்த நுண்ணுணர்வோடு, எதிர்படும் அதீத அழகை ரசிக்கிறது என்ற உண்மை, சுதந்திரத்தைப் பற்றிய புரிதலைப் பெற உதவும் ஒரு குறிப்பு எனக் கொள்ளலாம்.

சுதந்திரமாக இருப்பது என்றால் என்ன? உங்களுக்கு ஒத்துப்போகும் விஷயங்களைச் செய்வதும், உங்களுக்கு விருப்பமான இடங்களுக்குச் செல்வதும், விருப்பம் போல் சிந்திப்பதும், உங்களுக்கான சுதந்திரம் என்று எண்ணுகிறீர்களா? இவற்றை நீங்கள் எப்படியும் செய்வீர்கள், சுயேச்சையாக நடந்து கொள்ள அதிகாரம் இருப்பது, சுதந்திரமாகுமா? உலகில் பெரும்பாலோர் சுயேச்சையாக நடந்துகொள்பவர்கள்தாம். ஆனால், மிகச்சிலரே, சுதந்திரமானவர்கள். சுதந்திரம் என்பதில் குறிப்பாக உணர்த்தப்படுவது நுண்ணறிவாகும். சுதந்திரமாய் இருப்பதென்றால், நுண்ணறிவுடன் இருப்பதாகும். ஆனால், சுதந்திரமாய் இருக்க வேண்டும் என்று ஆசைப்படுவதால் மட்டும் நுண்ணறிவு வந்துவிடாது.

உங்களை ஓயாமல் நெருக்கிக் கொண்டிருக்கும் சமுதாய தாக்கங்கள், மதரீதியான நெருக்குதல்கள், உங்கள் பெற்றோர்களும் சம்பிரதாய மரபுகளும் உங்கள்மீது செலுத்தும் ஆதிக்கம், நீங்கள் வாழும் சூழல் ஆகியவற்றை நீங்கள் நன்றாகப் புரிந்துகொள்ளும் போதுதான், நுண்ணறிவு பிறக்கிறது. அரசாங்கம்,




## கேரள மக்களுக்கான ஒரு நிகழ்ச்சி

கேரள மக்களுக்கான கிருஷ்ணமூர்த்தி பவுண்டேஷனின் மலையாள பருவ இதழ் ''ஜீவித யாத்திரை'' என்ற பெயரில் வெளிவருகிறது. அதன் வாசகர்களுக்காக முதன்முறையாக, ஒரு நிகழ்ச்சி ஆகஸ்டு மாதம் 12 முதல் 14 வரை "Life may not have security; life is meant to be lived" என்ற தலைப்பில் கிருஷ்ணமூர்த்தி பவுண்டேஷன், வசந்த விஹாரில் நடைபெற்றது. கேரளத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து 40 பேர் பங்குகொண்ட இந்நிகழ்ச்சியில் மலையாள மொழிப் பெயர்ப்புடன் காணொளிக் காட்சிகளும் (படத்தில் காணலாம்) சொற்பொழிவுகள், கேள்வி பதில் நேரங்கள், கலந்துரையாடல்கள் ஆகியன மலையாளத்திலும், ஆங்கிலத்திலுமாக இடம்பெற்றிருந்தன. பங்கு பெற்றவர்களில் பலர் கிருஷ்ணமூர்த்தி வாசக மையத்தின் சூழ்நிலையில், வசந்த விஹாரிலேயே தங்கி பங்குபெற்றதற்கு தங்கள் மகிழ்ச்சியை தெரிவித்துக்கொண்டனர். இது போன்ற நிகழ்ச்சி இனி வருங் காலங்களிலும் தொடர வேண்டும் என்றும் பயன்பெற்றவர்கள் பலர் கருத்துக்களை தெரிவித்தனர்.

சமுதாயம், கலாச்சாரம், உங்கள் நம்பிக்கைகள், உங்கள் பெற்றோர், உங்கள் கடவுளர், உங்கள் மூட நம்பிக்கைகள், சற்றும் எண்ணிப் பார்க்காமல் நீங்கள் கடைப்பிடிக்கும் சம்பிரதாயங்கள் ஆகியவற்றைப் புரிந்துகொண்டு, அவற்றிலிருந்து விடுதலையாகி வெளிவருவதற்கு ஆழமான அகப்பார்வை அவசியமாகிறது. ஆனால், நீங்களோ அவைகளுக்கெல்லாம் எளிதாக இணங்கிப் போய் விடுகிறீர்கள். ஏனென்றால், உள்முகத்தில் நீங்கள் அச்சம் மிகக் கொண்டவராய் இருக்கிறீர்கள்.

வாழ்க்கையில் உயர்நிலையை எட்டாததால் ஏற்படும் அச்சம், உங்களுக்காக வழிபாடுகளை நடத்தித் தரும் அர்ச்சகர் குறை சொல்லி விடுவாரோ என்ற பயம், சம்பிரதாயங்களைச் சரியாக கடைப்பிடிக்கவில்லையோ என்ற பயம், செய்ய வேண்டிய சரியான செயல்களை செய்யவில்லையோ என்ற அச்சம் – இது போன்ற எண்ணங்களோடு, நீங்கள் அச்சத்தில் வாழ்கிறீர்கள். ஆனால், சுதந்திரம் என்பது உண்மையில் ஒரு இயல்பு நிலை. அந்நிலையில், அச்சப்படுதலோ நிர்ப்பந்தங்களுக்குக் கட்டுப்படுதலோ சுயபாதுகாப்பிற்கான உந்துதலோ இருப்பதில்லை.

பாதுகாப்புடன் இருக்கவேண்டும் என்று நாம் அனைவருமே விரும்புகிறோமல்லவா? நாம் எப்பேர்ப்பட்ட மகத்தானவர்கள், எவ்வளவு அழகாய் இருக்கிறோம், எப்படி அசாதாரண நுண்ணறிவு கொண்ட மேதாவிகளாய் இருக்கிறோம் என்றெல்லாம் மற்றவர்கள் நம்மைப் புகழ வேண்டும் என்று ஆசைப்படுகிறோம், சரிதானே? அப்படிப்பட்ட ஆசைகள் இருப்பதால் தான், நம் பெயர்களுக்குப் பின்னால் பி.ஏ., எம்.ஏ. என்றெல்லாம் எழுத்துக்களை வரிசைப்படுத்துகிறோம். இம்மாதிரியான பட்டங்கள், அடைமொழிகள் நமக்கு தன்னம்பிக்கையையும், சுயகௌரவத்தையும் தருகின்றன. புகழ்பெற்றவர்களாக இருப்பதையே நாம் அனைவரும் விரும்புகிறோம். நாம் குறிப்பிடப்பட வேண்டியவர்களாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படும் அக்கணத்திலேயே, நாம் கட்டுப்பட்டவராக, சுதந்திரமற்றவராக ஆகி விடுகிறோம்.

சுதந்திரம் என்பதைப் புரிந்து கொள்வதற்கு, மேலே குறிப்பிடப் பட்டது மிகவும் உதவக்கூடிய உத்தியாக இருப்பதால், தயவுசெய்து அதை கவனியுங்கள். அரசியல்வாதிகள், பதவி, அதிகாரம் என்றிருக்கும் லோகாயாத உலகிலோ, அல்லது நற்பன்பு, சீலம், புனிதத்துவம் போன்ற பண்புகளோடு நீங்கள் இருக்க ஆசைப்படும் ஆன்மிக உலகிலோ, எங்காகிலும், நீங்கள் அப்படிப்பட்டவராக 'ஆதல்' வேண்டும் என்று ஆர்வம்கொள்ளும் அக்கணத்திலேயே, நீங்கள் சுதந்திரத்தோடு இல்லை என்றாகிவிடுகிறது.

'ஆதல்' இயக்கத்தின் அபத்தத்தைக் கண்டுணர்வதால், ஒருவர், கள்ளங்கபடமற்ற தெளிவான மனம் கொண்டவராகிறார். அதன் விளைவாய், தான் 'அதுவாக' 'ஆதல்' வேண்டும் என்ற விருப்பத்தால் அவர் உந்தப்படுவதில்லை - அப்படிப் பட்டவரே, உண்மையில் சுதந்திரமான மனிதர். இந்த உண்மையில் பொதிந்திருக்கும் எளிமையை நீங்கள் புரிந்து கொள்ள முடிந்தால், அதனுடைய அசாதாரண அழகையும் ஆழத்தையும் உங்களால் புரிந்துகொள்ள முடியும்.

கல்விக்கூடங்களில் நடத்தப் படும் தேர்வுகள் அனைத்தும் உங்களுக்கு ஒரு பதவியை, கௌரவத்தைப் பெற்றுத்தரவே நடத்தப்படுகின்றன. பட்டங்கள், பதவி மற்றும் விஷய ஞானச் சேகரிப்பு ஆகியவை குறிப்பிட்ட 'ஒருவராக' நீங்கள் ஆவதற்கு உங்களை ஊக்குவிக்கின்றன. நீங்கள் பெயர்பெற்ற உங்கள் மாமாவைப் போல், தாத்தாவைப்போல் உச்சத்தைத் தொடவேண்டும். வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்றெல்லாம் உங்கள் பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் சொல்வதைக் கவனித்ததில்லையா? புகழ்பெற்ற வீரனையோ, தலைவனையோ, ஞானியையோ போல் நீங்கள் போலியாக நடந்து கொண்டால் உங்களுக்குச் சுதந்திரம் இல்லையென்றாகிறது. நீங்கள் குறிப்பிட்டவராக 'ஆதல்' வேண்டும் என்ற உங்கள் விருப்பத்தையே, அச்

## மரங்களை காப்பீர்!

கிருஷ்ணமூர்த்தி பவுண்டேஷனின் Google குழுவில் இனைவீர் <https://tinyurl.com/kfigroup>

இந்த google group-ல் இனைவதால், கிருஷ்ணமூர்த்தி பவுண்டேஷனின் நிகழ்வுகள் பற்றிய விவரங்களையும், பருவ இதழ்களையும் மின்னஞ்சல் மூலமாக பெறமுடியும். காகிதத்தின் தேவையை குறைக்க இது வழியாக அமையும். அடுத்த தலைமுறையினருக்கு காகிதமில்லா வசந்த இதழினை சாத்தியமாக்க இது ஆரம்பமாக இருக்கட்டும்.

உங்களது gmail account open செய்தபிறகு, மேலே உள்ள link-ல் Joint group என்பதினை click செய்யவும்.

மேலும் www.kfionline.org என்ற இனையதளத்தின் மூலம் கிருஷ்ணமூர்த்தி பவுண்டேஷனின் பல்வேறு மொழிகளில் உள்ள கடந்த காலத்திய பருவ இதழ்கள் பெற்று பயன்பெற முடியும்.

தூய்மையான சுற்று சூழலுக்கு நமது பங்களிப்பையும் தருவோம்.

செயல் சுட்டிக்காட்டுகிறது. அத்தகைய 'ஆதல்' செயல்பாடுகளைப் பற்றி உண்மையிலேயே புரிந்துகொள்வது, சுதந்திரத்தைக் கொண்டுவரும்.

சிறுவயது முதற்கொண்டே, யாரையும் காப்பி அடிக்காமல், போலியாக நடந்துகொள்ளாமல், எப்பொழுதும் உள்ளபடிக்கு நீங்களாகவே நடந்துகொள்வதற்கு உங்களுக்கு உதவுவதாக இருப்பது, கல்வியின் தலையாய பணி அல்லவா? போலித்தனம் இல்லாமல் இயல்பாக எந்நேரமும் இருப்பதென்பது மிகவும் சிரமமான விஷயம்தான். நீங்கள் அழகானவரோ, விகாரமானவரோ, பொறாமைக்குணம் கொண்டவரோ, எப்படிப்பட்டவராய் இருப்பினும், இயல்பாகவும் அதே நேரத்தில் இயல்பைப் பற்றிய புரிதலோடு இருப்பதென்பது எளிதான காரியமல்ல.

நீங்கள் பெருந்தன்மையானவரல்ல என்று நினைத்துக் கொள்கிறீர்கள். பெருந்தன்மை மிக்கவராக 'ஆகி'விட்டால் எவ்வளவு உன்னதமாக இருக்கும் என்றும் எண்ணுகிறீர்கள் - ஆனால், உங்கள் எண்ணம் ஈடேறுவதில்லை. ஆனால், உங்கள் இயல்பை உள்ளபடி பார்த்தறிந்து கொண்டு விட்டால், அந்தப் புரிதலே, உங்களுக்குள் ஒரு அடிப்படை மாற்றத்தைக் கொண்டு வருகிறது. உள்ளதை மாற்றமடையச் செய்ய வேண்டும் என்று நீங்கள் முயற்சிப்பதாலோ, அல்லது, தன்னிச்சையாக நீங்கள் விரும்புவதைச் செய்வதாலோ, அல்லது, உங்கள் பெற்றோர், உங்கள் குரு மற்றும் உங்கள் சம்பிரதாயங்களின் அதிகாரத்திற்கு அடிபணிந்து போவதாலோ, உங்களுக்குச் சுதந்திரம் கிட்டாது. உங்களுடைய இயல்பைப் பற்றிய விழிப்புணர்வோடு, கணத்திற்கு கணம் தன்னையறிதலுடன் இருக்கையில் சுதந்திரம் மலரும்.

மேற்குறிப்பிடப்பட்டவைகளைக் குறித்து இன்றைய கல்விமுறை உங்களுக்கு எதையும் கற்பிப்பதில்லை. நீங்கள் பெறும் கல்வி, உங்களை ஒரு ஆசிரியராகவோ, இல்லை, வேறு ஒரு பணி புரிபவராகவோ ஆவதற்கு ஊக்குவிக்கிறதே தவிர, உங்களை அறிந்து கொள்வதற்கு உதவுவதில்லை. உங்களின் 'நான், எனது' என்ற உணர்வு, பல முடிச்சுகளைக் கொண்ட சிக்கலான ஒன்று. பள்ளிக்குச் செல்லும் மாணவனாகவும், பந்தயங்களில் பங்கேற்று பல விளையாட்டுகளை விளையாடுபவனாகவும், சண்டை சச்சரவுகள் செய்பவனாகவும் மட்டும் நீங்கள் இல்லை. வெளிப்படையாகத் தெரியாத, பூடகமான மறைந்திருக்கும் பல குணாதிசயங்களைக் கொண்டவராகவும் நீங்கள் இருக்கிறீர்கள். உங்களின் 'தான், எனது' என்ற உணர்வு, உங்கள் சிந்தனையால் மட்டுமின்றி, மற்றவர்களாலும், நீங்கள் படிக்கும் புத்தகங்களாலும், செய்தித்தாள்களாலும், உங்கள் தலைவர்களாலும் உருப் பெறுகிறது.

உங்களைப் பற்றி அறிந்து கொள்ள, அதாவது, 'தான், எனது' என்ற உணர்வை புரிந்துகொள்ள, முதலில், உயர்ந்ததோர் நிலையை எட்டிவிட வேண்டும் என்று ஆசைப் படாதவராகவும், உள்ளதை மறைத்து விட்டு, வெளியில் பகல்வேஷம் போடாதவராகவும், கொள்கைப்பற்று கொண்டிராதவராகவும் நீங்கள் இருத்தல் அவசியம் – இவ்வாறு கூறுவதின் பொருள் என்னவென்றால், இருக்கும் நிலையிலிருந்து மாறி, வேறொன்றாக ஆவதற்கான முயற்சியை வலியுறுத்தும் சம்பிரதாய மரபுகளுக்கு எதிராக நீங்கள் கிளர்ந்தெழுகிறீர்கள் என்பதாகும். உண்மையில், இவ்வாறு எதிர்த்து போராடுவதுதான் உண்மையான புரட்சியாகும். இப்புரட்சியே, மகோன்னதமான சுதந்திரநிலைக்கு நம்மை அழைத்துச் செல்லும். இவ்வகைச் சுதந்திரத்தைப்பெற வித்திட்டு அதைப் பேணி வளர்ப்பதே, கல்வியின் உண்மையான பணியாகும்.

மகிழ்ச்சியாகவும், ஆபத்தில் மாட்டிக்கொள்ளாமல் பத்திரமாக இருக்கவும் நம்மை நாம் ஏதோ ஒன்றுடன் அடையாளப்படுத்தி கொள்ள விரும்புகிறோம். நம் பெற்றோர்களும் ஆசிரியர்களும்கூட நாம் நம்மை அவ்வாறு அடையாளப் படுத்திக் கொள்வதையே விரும்புகிறார்கள். ஆனால், நுண்ணறிவுடனிருப்பதற்கு, உங்களை அடிமைப் படுத்தி நசுக்கிப்பிழியும் தாக்கங்களை உடைத்தெறிந்து நீங்கள் வெளிவர வேண்டாமா?

வார்த்தையளவில் நின்றுவிடாது, பொய்மையை இனம் கண்டு கொண்டு, அதற்கு எதிராக உண்மையில் செயல்படுபவர்கள் மட்டுமே புதியதோர் உலகை உருவாக்குவதற்கான நம்பிக்கை ஒளியாக உள்ளனர். அப்படிப்பட்டவராக நீங்கள் இருக்க வேண்டுமெனில், சுதந்திரத்தோடு நீங்கள் வளர உதவும் சரியான முறை கல்வியை நீங்கள் தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் சுதந்திரத்தோடு வளர்ந்தால்தான், சம்பிரதாயங்களின் அடிப்படையிலோ, அல்லது, ஏதோவொரு தத்துவ ஞானியில் அல்லது லட்சியவாதியின் விசித்திர எண்ணப் போக்கின்படியோ அமையாத புதியதோர் உலகை உருவாக்க முடியும். நீங்கள் ஏதோவொரு நிலையை அடைந்துவிட வேண்டும் என்று முயற்சித்தாலோ, மேன்மைமிக்க ஒருவரைப்போல் நடித்தாலோ, நீங்கள் சுதந்திரமானவரில்லை என்றாகிறது.

– எண்ணிப்பார்க்க வேண்டிய ஏராளமான விஷயங்கள்
அத்தியாயம் - 2

## துக்கம் தனிப்பட்டவருடையது அல்ல என்பதை உணர்ந்தால்...

**உ**ங்கள் துக்கம் என்பதும், என் துக்கம் என்பதும் ஒன்றுதான். துக்கப்படும் விஷயங்கள் வேறுபடலாம், ஆனால், துக்கம் ஒன்றுதான். ஆதலால், துக்கம் தனிப்பட்டவருடையது அல்ல. இது உங்களுக்கு புரிகிறதா என்று எனக்கு தெரியவில்லை. நீங்கள், இதன் உண்மையை பார்ப்பது மிகக் கடினம் தான். நான் துன்பப்படுகிறேன். நீங்களும் துன்பப்படுகிறீர்கள். நீங்கள் ஒரு காரணத்திற்காகவும், நான் வேறு ஒரு காரணத்திற்காகவும் துன்பப்படுகிறோம். நான், குறிப்பிட்ட என் துன்பத்துடன் அடையாளப்படுத்திக் கொள்கிறேன், நீங்கள் உங்களுடைய துடன் இணைத்துக்கொள்கிறீர்கள். இவ்வாறு நாம் நம்மை பிரித்துக் கொள்கிறோம். பின்பு துன்பத்தை அடக்குவது, பகுத்தறிவது போன்ற பல்வேறு வழிகளை தேடுகிறோம்.

மாறாக, துன்பம் என்பது மனித இனத்திற்கு பொதுவானது என்றும், நாமும் எஞ்சிய மனிதகுலத்தின் அங்கமே என்றும் உணர வேண்டும். நமக்கும் பிறரைப்போலவே பயம், துன்பம், இன்பம், கவலை போன்றவை இருப்பதால், துன்பம் என்பது தனிப்பட்ட என் துன்பம் அல்ல என்று உணர்ந்தால், பின்பு, என் துன்பம் மிகவும் அற்ப விஷயமாகி விடுகிறது.

அதாவது, நாம்தான் இந்த ஒட்டு மொத்த மானுடம், ஏனைய மாந்தர்களும் நாம்தான், துன்பம் நேர்கையில், அது மனித வர்க்கத்தின் துன்பமாகும் என்பதை உணர்ந்தால், பின்பு, நீங்கள் பிரச்சினையை முற்றிலும் வித்தியாசமாக அணுகுவீர்கள். ‘என்னுடைய துன்பம்’ என்றே இல்லை. ‘கடவுளே! துன்பத்தை கடந்து செல்லவும், புரிந்துகொள்வதற்கும் உதவிசெய்’ என்று பிரார்த்திப்பதெல்லாம் துன்பத்தை என் சொந்த விஷயமாக்கி அதை அற்பமாக்கி விடுகிறது. மாறாக, எஞ்சிய மனித குலமும் துன்பப்படுகிறது எனும் போது, பின்பு, துன்பம் என்பது அக்கறையுடன் ஒருவன் கண்டுணர வேண்டிய மிகவும் அசாதாரண விஷயமாக மாற்றமடைகிறது.

ஒரு மனிதன் துன்பத்தின் தன்மையை புரிந்துகொண்டு, அதற்கு அப்பால் சென்றுவிட்டால், அவன் மனிதவர்க்கத்திற்கு உதவுகிறான்.

–Brockwood Park, 1983,
3rd Public Talk

## அற்பத்தனத்தால் அழகானதை உருவாக்க இயலாது

**அ**ற்ப மனது எப்போதும் அற்பம்தான். அதை உயர்ந்ததாக, தாராளமுடையதாக ஆக்க முடியாது. அது தன்னைத் தானே அலங்கரித்துக் கொண்டாலும், அல்லது தார்மீகத்தை அடைய முயற்சி செய்தாலும், அது அப்படியே அதே போல, அற்பமாக, ஆழமற்ற தன்மையாகவே இருக்கிறது. நீங்கள் வளர்ச்சி, அனுபவம் என்று சொல்வதன் மூலமாக, அது தன் சொந்த அற்பத் தனத்தைதான் வலிமையடைய செய்கிறது. அற்பத்தனம் அழகற்றது. ஆகவே, அதனால் அழகானதை உருவாக்க இயலாது. அற்ப மனதின் கடவுளும் அற்பமுடையதாகத்தான் இருக்கும். குறுகிய மனதானது அறிவினாலும், புத்திகூர்மையான சொற்களாலும் தன்னை அலங்கரித்து கொள்வதின் மூலமாகவோ, ஞான சம்பந்தமான வாக்கியங்களை சுட்டிக் காட்டுவதன் மூலமோகவோ, தன்னுடைய புறத்தோற்றத்தை அலங்கரித்துக்கொள்வதின் மூலமாகவோ ஆழமான தன்மையாக ஆகிவிடமுடியாது. மனதின் உள்ளிலோ, வெளி அலங்காரமோ, எதுவானாலும், அலங்காரங்கள் ஆழமுள்ள தன்மையை உண்டாக்காது.

ஆழமான தன்மையே அழகை வெளிப்படுத்தும். மாறாக, முயன்று பெற்ற தத்துவங்களாலோ, அலங்காரங்களாலோ அல்ல.

அந்த அழகு மலர வேண்டுமானால், மனமானது தன் சொந்த அற்பத்தனத்தை, எந்த ஒன்றையும் தேர்ந்தெடுக்காமல் விழிப்புணர்வு கொள்ள வேண்டும். ஒப்பிடுவது என்பது முற்றிலும் இல்லாத விழிப்புணர்வு அதற்கு வேண்டும்.

–Commentaries on Living
Chapter-Spontaneity.

## பற்றுதலின் இயல்பு

**அ**னைத்துவித பற்றுதலும் இறந்து போனதையோ அல்லது இருந்து கொண்டிருக்கும் ஒன்றின் மீதோ இருக்கும். இறந்துபோன ஒன்றின்மீது பற்றுகொள்ள முடியும், உயிரோட்டமுள்ள ஒன்றின்மீது பற்றுகொள்ள முடியாது.

உயிர்தன்மையுள்ள உங்கள் மனைவிமீது நீங்கள் பற்றுகொள்வதில்லை. மாறாக, மனைவியினால் பெற்ற இன்ப நினைவாக உள்ள மனைவியின்மீதே நீங்கள் பற்று கொள்கிறீர்கள்.

ஓடிக்கொண்டிருக்கும் நதியின் மீது பற்றுகொள்ளமுடியாது, நதியை பார்த்து ரசித்த இன்பத்தையே நீங்கள் பற்றிக்கொள்கிறீர்கள், அதாவது நினைவை – இறந்துபோனதை.

–New Delhi 1959, 10th Public Talk

# புதிய தலைமுறையினரை இயந்திரத்தனமானவர்களாக ஆக்கிவிடாதீர்கள்

நீங்கள் கற்பிப்பவர் எனில், வெறும் உயிரியல், வேதியியல் போன்ற விஷயங்களைப்பற்றி மட்டும் தகவல் தருபவரா? அல்லது, நீங்கள் ஆசிரியர் என்ற உயர்ந்த உணர்வுடையவரா?

அதாவது, நீங்களும், மாணவனும் எவ்வாறு நடந்துகொள்கிறீர்கள் என்ற அக்கறை உடையவராக, இவற்றில் ஒரு சுவையைப் பெற அக்கறை உடையவராக, அழகுணர்வை அவர்களுக்கு விதைப்பவராக உள்ளவரா நீங்கள்? இந்நாட்டிலே அப்படிப்பட்ட ஓர் அழகுணர்வே இல்லை. ஏழ்மையிலுள்ள குழந்தைகளுக்கு ஆசிரியர் நீங்கள் எனில், அவ்வறுமை ஏன் உள்ளது? என்ன தவறு நடந்தது? இவையெல்லாம் யாருடைய தவறு? அரசின் தவறா? அல்லது மக்கள் தொகை பெருக்கத்தாலா அல்லது வேறொன்றினாலா? இவை எல்லாவற்றிற்கும் யார் பொறுப்பாளி? இந்நாட்டில் உங்களை சுற்றிலும் எப்போதுமே வறுமை நிறைந்துள்ளது. இதை பார்த்தீர்கள் என்றால் மனமுடைந்து அழுதுவிடுவீர்கள்.

இவை எல்லாவற்றிற்கும் யார் பொறுப்பாளி? குழந்தைகளுக்கு கற்பிப்பதன் மூலம் அவர்களை என்னவாக ஆக்கப்போகிறீர்கள். அதிகார வர்க்கமாகவா? வக்கீலாகவா? மருத்துவராகவா? அல்லது, பழைய சமூக அமைப்பில் அங்கத்தினராக ஆக்கப்போகிறீர்களா? இந்த எல்லா கேள்விகளும் உங்களுக்கு புரிகிறதா? ஏழை குழந்தைகள், பணக்கார குழந்தைகள் என்று அவர்களை பிரிக்காதீர்கள். அவர்கள் குழந்தைகள் அவ்வளவே. உங்களுக்கு, அக்கறை, பரிவு, அன்பு போன்றவை இருப்பின், கல்வி என்பது முற்றிலும் வேறு கோணமாகிவிடும்.

ஆனால், நீங்கள் அக்கறை கொள்வதேயில்லை, அதுதான் இங்கு நிகழ்கிறது. நீங்கள் கருதுவதெல்லாம், உங்கள் குழந்தைகளுக்கு ஒரு நல்ல வேலை கிடைக்கச்செய்து, திருமணம் செய்துவைத்து குடியமர்த்துவதுதான். இதைத்தான் நீங்கள் பொறுப்பு என்று அழைக்கிறீர்கள்.

ஆகையால், பாவம் அந்த குழந்தைகளுக்கு என்ன ஆகிறது? அவர்களும் உங்களைப்போல ஆகிவிடுகிறார்கள். ஒவ்வொரு நாளும் அலுவலகம் என அறுபது வயது வரை வேலைக்கு செல்வது, பின்பு உடல் செயல்குன்றி, அதன்பின், கடவுள், மறுபிறப்பு, அழகிய சொர்க்கம் என்றெல்லாம் பேசுவீர்கள். நாம் கடுமையாக பேசவில்லை. நடந்து கொண்டிருப்பவையைத்தான் பேசுகிறோம்.

ஆக, ஆசிரியர் வேலை என்பது உலகிலேயே மேலான தொழிலாகும். ஏனெனில், நீங்கள் புதிய தலைமுறையினரை உருவாக்குகிறீர்கள், பழைய தலைமுறையினரை அல்ல. புதிய தலைமுறையினரையும் இயந்திரத்தனமாக ஆக்கிவிடாதீர்கள். பிரச்சினையை உருவாக்குவது நீங்களே, பெற்றோர்களே. குழந்தைகள் அல்ல. அவர்களையும் இவ்வுலகிலுள்ள மற்ற சாமான்யரைப் போல ஆக்க விரும்புகிறீர்கள். இனி, இதை நீங்கள்தான் முடிவுசெய்ய வேண்டும்.

–First Public Question & Answer
Meeting in Madras
January 1981

**Statement about ownership and other particulars of Vasantha Ethal**

**FORM IV**

| | | |
|---|---|---|
| 1. Place of publication | : | Krishnamurti Foundation India<br>Vasanta Vihar<br>124, 126 Greenways Road<br>Chennai – 600 028 |
| 2. Periodicity of publication | : | Once in four months (February, June, and October) |
| 3. Printer's name | : | N. Subramanian |
| Whether citizen of India | : | Yes |
| Address | | Sudarsan Graphics<br>Offset Press<br>27 Neelakanda<br>Mehta Street<br>T.Nagar<br>Chennai - 600 017 |
| 4. Publisher's name | : | Dr. V. Aravind |
| Whether citizen of India | : | Yes |
| Address | : | Anugraha<br>Flat No. 2,<br>Old No 26, New No 51<br>Fourth Trust Cross Street<br>Mandavelli<br>Chennai – 600 028. |
| 5. Editor's Name | : | K. Krishnamurthy |
| Address | : | Krishnamurti<br>Foundation India<br>Vasanta Vihar<br>124, 126 Greenways Road<br>Chennai - 600 028 |
| 6. Name and address of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital. | : | Krishnamurti<br>Foundation India<br>Vasanta Vihar<br>124, 126 Greenways Road<br>Chennai – 600 028 |

I, Dr. V. Aravind, hereby declare that the particulars given are true to the best of my knowledge and belief.

(V.Aravind)

*Published in February, June & October.*
*Registered with The Registrar of Newspapers for India under No. TNTAM/2006/17823*

Periodical

*If undelivered please return to:*
KRISHNAMURTI FOUNDATION INDIA
Vasanta Vihar, 124,126 Greenways Road
Chennai - 600 028. Tel: 24937803/24937596
E-mail: publications@kfionline.org
Websites: www.kfionline.org / www.jkrishnamurti.org

*Published by Dr. V. Aravind on behalf of the Krishnamurti Foundation India, Vasanta Vihar, 124, 126 (Old 64, 65) Greenways Road, Chennai - 600 028. Printed by N. Subramanian at Sudarsan Graphics Offset Press, 27 Neelakanta Mehta Street, T. Nagar, Chennai – 600 017. Editor: K. Krishnamurthy*